# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2025 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம் (திருத்தச்) சட்டம்

---

**[2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]**

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2025, யூலை மாதம் 25 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா. 20.00** **தபாற் செலவு : ரூபா. 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத் தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2025 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம் (திருத்தச்) சட்டம்**

[2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.-ஓ 18/2025

## 2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்குவரும் தேதியும்

**1.** (1) இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதன (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் 2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துவிட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்

**2.** இரண்டாயிரத்துப் பதினாறாமாண்டின் 3 ஆம் இலக்க, வேலையாட்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றத:-

"(1) (அ) இரண்டாயிரத்து இருபத்தைந்தாமாண்டு ஏப்பிறல் மாதம் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்றதும் 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்காக, ஏதேனும் கைத்தொழிலில் அல்லது சேவையில் உள்ள எல்லா வேலையாளர்களுக்குமான தேசிய குறைந்தபட்ச மாதாந்த வேதனம் இருபத்தேழாயிரம் ரூபாவாதல் வேண்டுமென்பதுடன் ஒரு வேலையாளரின் தேசிய குறைந்தபட்ச நாளாந்த வேதனம் ஆயிரத்தெண்பது ரூபாவாதலும் வேண்டும்.

(ஆ) இரண்டாயிரத்து இருபத்தாறாமாண்டு சனவரி மாதம் 1 ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக, ஏதேனும் கைத்தொழிலில் அல்லது சேவையில் உள்ள எல்லா வேலையாட்களுக்குமான தேசிய குறைந்தபட்ச மாதாந்த வேதனம் முப்பதாயிரம் ரூபாவாதல் வேண்டுமென்பதுடன் ஒரு வேலையாளரின் தேசிய குறைந்தபட்ச நாளாந்த வேதனம் ஆயிரத்து இருநூறு ரூபாவாதலும் வேண்டும்.".

தேசிய குறைந்தபட்ச வேதனத்தில் வரவுசெலவுத் திட்ட நிவாரணப்படியை உள்ளடக்குதல்

**3.** ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, இத்தால் பின்வருமாறு பிரகடனம் செய்யப்படுகின்றது :-

(அ) 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் அல்லது 2016 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வேலையாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் அல்லது அத்தகைய இரண்டு சட்டங்களினதும் ஏற்பாடுகளின்கீழ் 2025, மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறாக செலுத்தப்படற்பாலதான வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி ஏதேனும் கைத்தொழிலில் அல்லது சேவையில் உள்ள எல்லா வேலையாளர்களுக்கும் செலுத்தப்படற்பாலதான 2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேசிய குறைந்தபட்ச வேதனத்தின் பாகமாக அமைதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் அல்லது 2016 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வேலையாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் அல்லது அத்தகைய இரண்டு சட்டங்களினதும் ஏற்பாடுகளின்கீழ் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படிகளை உள்ளடக்கப்பட்ட வேதனமொன்றை 2025, மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறாக பெற்ற எவரேனும் வேலையாளின் வேதனம் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து அத்தகைய வேலையாளில் அத்தகைய வேதனங்கள் பாகமாக அத்தகைய படிகளை ஒன்றாக்குதல் வேண்டும்.

வேதனம் மற்றும் படிகளின் குறைப்பைத் தடுத்தல்

**4.** தொழில்தருநர் ஒருவர், இச்சட்டத்தின்கீழ் 2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்துக்கான திருத்தங்களின்மூலம் தேசிய ஆகக்குறைந்தபட்ச வேதனத்துக்குச் செய்யப்பட்ட அதிகரிப்பை மறுக்கக்கூடிய முறையொன்றில், 2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டம், 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டம் அல்லது 2016 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வேலையாளர்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டம் என்பவற்றின்கீழ்

செலுத்தப்படற்பாலனவான எவையேனும் படிகள் உள்ளடங்கலாக, ஏதேனும் தொழிற்றுறையில் அல்லது சேவையிலுள்ள எவரேனும் வேலையாளின் மாதாந்த வேதனத்தைக் குறைத்தலாகாது.

தேசிய குறைந்தபட்ச வேதனத்திலான அதிகரிப்பை அமுலாக்குதல்

**5.** ஆணையாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின்கீழ் 2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வேலையாளர்களின் குறைந்தபட்ச வேதனச் சட்டத்துக்கான திருத்தங்களின்மூலம் தேசிய குறைந்தபட்ச வேதனத்துக்குச் செய்யப்பட்ட அதிகரிப்பு ஆனது முறையாக அமுலாக்கப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு இடையீட்டாளர் அல்லது ஒப்பந்தகாரர் ஊடாக ஏதேனும் தொழிற்றுறையில் அல்லது சேவையிலுள்ள எவரேனும் வேலையாளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்கின்ற இறுதியான தொழில்தருநர் உள்ளடங்கலாக எவரேனும் தொழில்தருநருக்கு பணிப்புரைகளை விடுத்தல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**6.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை ''பிரகாசன பியச'', அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.